81

**சுருக்கம்**

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பண்டிகை முன்பணமாக வழங்குதல் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணம் இரண்டாயிரம் ரூபாய் பெற்று வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் (சஉ.தி.2) துறை

அரசு ஆணை (நிலை) எண். 174

நாள் 31–12–2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 16 ம் நாள்

படிக்கப்பட்டது : -

1. சமூக நல ஆணையர் அவர்களின் கடித எண்.48485/சஉ.தி(இ)–4/09 நாள். 25–09–09.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21–11–2009 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்

---

ஆணை:-

சமூக நல ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ள முன்மொழிவில், சத்துணவு பணியாளர்களின் பல்வேறு சங்கங்கள் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அரசுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ரூ. 2000/– வழங்கப்பட்டு, இத்தொகையினை மாதம் ரூ.200/– வீதம் 10 மாதங்களில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

2. தற்போது சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு, அவர்களது ஊதியம், தமிழ்நாடு திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விதிகள் 2009ன் படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ள நிலையில், இப்பணியாளர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஆண்டுக்கொருமுறை பண்டிகைக்கால முன்பணமாக ரூ.2000/– வழங்கலாம் எனவும், அதனை மாதம் ரூ.200/– வீதம் 10 மாத காலத்தில் பிடித்தம் செய்யலாம் எனவும் தெரிவித்து உரிய அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்நிலையில் தமிழ்நாடு சத்துணவு, குழந்தைகள் நல மைய பணியாளர்கள் சங்கங்களின் சார்பாக 21–11–09 அன்று நடத்திய ஒருங்கிணைந்த நன்றி பாராட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்;

> "அரசு பணியாளர்களுக்கு வழங்குவதை போன்றே இனி, சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கும் இரண்டாயிரம் ரூபாய் பண்டிகைக்கால முன்பணமாக வழங்கப்படும். இதனால் ஏறத்தாழ 2 இலட்சத்து 6 ஆயிரம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்".

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்றே இனி, சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் இரண்டாயிரம் ரூபாய் பண்டிகை முன்பணமாக பெற்று வழங்க அரசு ஆணையிடுகிறது. மேற்காணும் முன்பணத் தொகை ரூபாய் இரண்டாயிரத்தை அவர்களது ஊதியத்தில் பிரதி மாதம் 200 ரூபாய் வீதம் 10 மாத காலத்தில் பிடித்தம் செய்யவும் ஆணை வெளியிடப்படுகிறது.

5. இவ்வாணை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது. மேலும் இவ்வாணை வெளியிடப்படும் நாளுக்கு பின்னர் வரும் பண்டிகைகளுக்கு மட்டும் பொருந்தும் எனவும் ஆணையிடப்படுகிறது.

6. மேலே பத்தி 4 ல் உள்ள ஆணையினை செயல்படுத்துவதால் ஏற்படும் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>சத்துணவுப் பணியாளர்கள்:-</u>

| | | |
|---|---|---|
| i | ரூ. 1,92,000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – JT. New Programme of feeding poor children 10 to 15 in Denotified Community Schools- 49 Festival Advances – 01 Festival Advances – Debit."<br>(D.P.Code: 2236-02-102-JT-4914) |
| ii | ரூ. 17,90,36, 000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KL – Puratchi Thalaivar MGR Nutritious Meal Programme for children in the age group of 5 to 9 - 49 Festival Advances – 01 Festival Advances – Debit."<br>(D.P.Code: 2236-02-102-KL-4919) |

| | | |
|---|---|---|
| iii | ரூ. 15,52,000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KM. New Programme of feeding of poor children 5 to 9 years in Denotified Community Schools - 49. Festival Advances – 01 – Festival Advances – Debit" (D.P.Code: 2236-02-102-KM-4917) |
| iv | ரூ. 3,38,58,000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KN – Purathich Thalaivar MGR Nutritious Meal Programme for children in the age group of 10 to 14 in the Government and aided schools – 49. Festival Advances – 01 – Festival Advances – Debit" (D.P.Code: 2236-02-102-KN-4915) |
| v | ரூ. 69,44,000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KO – Feeding children of Adi Dravidar Welfare schools under Puratchi Thalaivar MGR Nutritious Meal Programme - 49. Festival Advances – 01 – Festival Advances – Debit" (D.P.Code: 2236-02-102-KO-4913) |
| vi | ரூ. 76,52,000 | "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KP. Puratchi Thalaivar MGR Nutritious Meal Programme for children in the age group of 5 to 9 in the Corporation and Municipal Schools - 49. Festival Advances – 01 – Festival Advances – Debit" (D.P.Code: 2236-02-102-KP-4911) |

vii ரூ. 20,34,000 "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 102. Mid day Meals – II. State Plan – Schemes in the Eleventh Five Year Plan – KQ. Puratchi Thalaivar MGR Nutritious Meal Programme for children in the age group of 10 to 14 in the Corporation and Municipal Schools - 49. Festival Advances – 01 – Festival Advances – Debit"
(D.P.Code: 2236-02-102-KQ-4919)

அங்கன்வாடிப் பணியாளர்கள்:-

viii ரூ. 18,06,00, 000 "2236 Nutrition – 02. Distribution of Nutritious Food and Beverages – 101. Special Nutrition Programmes JN Tamil Nadu Integrated Child Development Scheme Phase III – 49 Festival Advances – 01 – Festival Advances - Debit"
(D.P.Code: 2236-02-101-JN-4918)

7. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2009–10 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இச்செலவினம் சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு 2009–10 ஆம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கையில் சேர்க்கப்படும். 2009–2010 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள சமூகநல ஆணையர் மற்றும் ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியோருக்கு அனுமதியளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2009–10 ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு சமூகநல ஆணையர் மற்றும் ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவை அ.சா.கு.எண். 314/JS (APA) / 09 நாள். 31–12–09 மற்றும் கூடுதல் நிதயொதுக்க பேரேடு எண்: 1377 (ஆயிரத்தி முன்னூற்று எழுபத்து ஏழு) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.இராமமோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சென்னை–113.

93

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,
சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர்,
சென்னை–2

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதி (ச.ந./வ.செ. பொது–I / வ.செ. பொது–II)த்துறை
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.